கவிதை: வாக்களிப்போம் வாருங்கள் !

Written by - மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா .... மெல்பேண் .... அவுஸ்திரேலியா -
Sunday, 21 April 2019 10:00 - Last Updated Sunday, 21 April 2019 10:01

தேர்தல்தேர்தல் தேர்தலென்று தெருவெல்லாம் திரிகிறார் ஆளைஆளை அணைத்துபடி அன்புமுத்தம் பொழிகிறார்

நாளைவரும் நாளையெண்ணி

நல்லகனவு காண்கிறார்

நல்லதெதுவும் செய்துவிட

நாளுமவர் நினைத்திடார் !

மாலை மரியாதையெல்லாம் வாங்கிவிடத் துடிக்கிறார் மக்கள்வாக்கை பெற்றுவிட மனதில்திட்டம் தீட்டுறார்

வேலைபெற்றுத் தருவதாக

போலிவாக்கை விதைக்கிறார்

வாழவெண்ணும் மக்கள்பற்றி

மனதிலெண்ண மறுக்கிறார் !

ஆட்சிக்கதிரை ஏறிவிட அவர்மனது துடிக்குது அல்லல்படும் மனதுபற்றி அவர்நினைக்க மறுக்கிறார்
அதிகசொத்து பதவியாசை

அவரைசூழ்ந்து நிற்குது

அவரின்காசை அனுபவித்தார்

1 / 2

கவிதை: வாக்களிப்போம் வாருங்கள் !

Written by - மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா .... மெல்பேண் .... அவுஸ்திரேலியா -
Sunday, 21 April 2019 10:00 - Last Updated Sunday, 21 April 2019 10:01

அவர்க்குத்துதி பாடுறார் !

அறத்தைப்பற்றி நினைத்திடார் அக்கறையை விரும்பிடார் இருக்கும்வரை அரசியலால் எடுத்துச்சுரட்ட நினைக்கிறார்

வாக்களிக்கும் மக்கள்தம்மை

போக்குக்காட்டி ஏய்க்கிறார்

வாக்குக்கொண்டு போகுமாறு

வாக்களிப்போம் வாருங்கள் !

jeyaramiyer@yahoo.com.au

2 / 2